**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.86/2024**

**இ.ம.எண்.05/2025**

1) ரெத்தினாசலம் **(இறந்துவிட்டார்)** **...மனுதாரர்/பிரதிவாதி**

2) கௌசல்யா

3) வினோத்

4) கார்த்திகேயன் **...மனுதாரர்கள்**

**(2 முதல் 4 மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் வாரிசு என I.A.No.6/2025 ல் 13.11.2025 ம் தேதி ஏற்பட்ட உத்தரவின் படி சேர்க்கப்பட்டுள்ளனர்)**

**/எதிர்/**

தர்மலிங்கம் **..எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 26.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 7 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரரால் மேற்படி அசல் வழக்கில்

மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் பிரதிவாதியாவார். எதிர்மனுதாரர்/வாதி மேற்படி அசல் வழக்கை மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்து சம்பந்தமாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் வழக்கறிஞர் மூலம் மனுதாரர் ஆஜாராகி இருந்தார். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், மேற்படி அசல் வழக்கை மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், கடந்த 21.01.2025ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது என்றும் தெரியபடுத்தினார்.

**3)** இந்நிலையில், வாய்தா தேதிக்கு முன்பாக மனுதாரரின் காலில் அடிபட்டு அதற்காக மருத்துவ சிசிக்சை எடுத்து வந்தார். அந்த சமயத்தில், மனுதாரரால் அவரது வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியான பிறகு ஆவணங்களுடன் வழக்கறிஞரை சந்தித்தபோது, கடந்த 21.01.2025 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக மேற்படி அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளதாக வழக்கறிஞர் தெரியப்படுத்தினார்.

**4)** உடனடியாக, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரையும் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. மனுதாரர் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜாராகாமல் இருக்கவில்லை. எனவே, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:**

5) மனுதாரரின் இம்மனு சரியல்ல. இம்மனுவானது செல்லத்தக்கத்தல்ல. ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. இம்மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

6) மனுவில் சொல்லியிருக்கும் சங்கதிகள் யாவும் உண்மைக்கு மாறுபட்டவை. அவற்றின் உண்மைத்தன்மையை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒருதலைபட்ச உத்தரவானதற்கு சொல்லியிருக்கும் காரணங்கள் சட்டப்படி ஏற்புடையதல்ல. கடந்த 21.01.2025ம் தேதி மனுதாரருக்கு காலில் அடிபட்டு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டு இருப்பதற்கு சொல்லியிருப்பதற்கு எவ்வித ஆவணங்களும் இல்லை.

7) மனுதாரர் வேண்டுமென்றே அசல் வழக்கில் உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல், கடந்த 21.01.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்ட நிலையில், மேற்படி அசல் வழக்கில் வாதுரை கேட்கப்பட்டு தீர்ப்புக்காக வழக்கினை ஒத்தி வைத்திருக்கும் நிலையில், ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்திருப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இந்த எதிர்மனுதாரருக்கு பெருத்த மனு உளைச்சலும், மன விரக்தியையும், வீண் அலைச்சலையும் ஏற்படுத்தியதற்காக மனுதாரரின் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும். இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

<u>**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**</u>

**8)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

<u>**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u>

**9)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>**தீர்வு:**</u>

**10)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு முறையாக அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி, சட்டம் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் மனுதாரரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமல் இருந்துள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கில் இந்த மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால், கடந்த 21.01.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**11)** மேலும், அதனைத் தொடர்ந்து வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பின்பு வா.சா.2 விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.7 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, மேற்படி அசல் வழக்கு தீர்ப்புக்காக போடப்பட்டிருந்த நிலையில், இந்நீதிமன்றத்தால் வாதி தரப்பில்

ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு, மேற்படி அசல் வழக்கானது மீண்டும் திறக்கப்பட்டிருந்த நிலையில், இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதியால் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**12)** இந்நிலையில், மனுதாரர் தரப்பில் மேற்படி அசல் வழக்கானது, கடந்த 21.01.2025 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்த தேதிக்கு முன்பாக மனுதாரரின் காலில் அடிபட்டு, மனுதாரர் மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததாகவும், அந்த சமயத்தில் மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், மனுதாரருக்கு உடல்நிலை சரியான பின்பு ஆவணங்களுடன் அவரது வழக்கறிஞரை சந்தித்தபோதுதான், மேற்படி ஒருதலைபட்ச உத்தரவு மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட விவரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், உடனடியாக இம்மனுவை அவர்கள் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு மேற்படி அசல் வழக்கில் நல்ல கட்சி உள்ளது என்றும், இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பொருட்டு அவசியம் என்றும் கூறி வாதிடப்பட்டது.

**13)** மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டு, மனுதாரரால் இம்மனுவை அனுமதிக்க சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும், அவற்றை நிரூபணம் செய்வதற்கு எவ்வித ஆவணங்களும் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யப்படாமல் காலதாமதத்தோடு தீர்ப்புக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், இம்மனுவை அனுமதிக்கும் பொருட்டு எதிர்மனுதாரருக்கு அதிகப்படியான மன உளைச்சலும், விரக்தியும்,

வீண் அலைச்சலும் ஏற்படும் என்றும், எனவே, இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**14)** இவ்வாறு இருக்கையில், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், இம்மனு நிலுவையில் உள்ள சமயத்தில் இம்மனுவின் மனுதாரர், கடந்த 20.07.2025 அன்று இறந்துவிட்டதாக மனுதாரர் தரப்பில், முன்னிலையாகிய கற்றறிந்த வழக்கறிஞரால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, பின்பு மனுதாரரின் வாரிசுகளாக 2 முதல் 4 வரையான மனுதாரர்களை, இம்மனுவில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக கடந்த 21.01.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அசல் வழக்கின் தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டு மேற்படி அசல் வழக்கு இந்நீதிமன்றத்தால் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இம்மனுவானது கடந்த 05.04.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**15)** மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 7ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சட்ட கோட்பாடுகளை இம்மனுவிற்கு பொருத்தி பார்க்கும்போது, மனுதாரரால் மேற்படி அசல் வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய கூறப்பட்டுள்ள காரணங்களானது தகுதி வாய்ந்த மற்றும் போதுமான காரணங்களாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மனுதாரர் தரப்பில் கூறியுள்ளது போல், இம்மனுவுடன் மனுதாரரால் மேற்படி அசல் வழக்கின் எதிர்வழக்குரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் போதுமான மற்றும் தகுந்த வாய்ப்புகள் வழங்கி, சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இரு

தரப்பினர்களுக்கும் அவர்கள் கட்சியை நிரூபணம் செய்ய வாய்ப்புகள் அளிக்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இரு தரப்பினர்களுக்கும் தகுந்த வாய்ப்புகள் அளிக்காமல், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் இடையே உள்ள பிரச்சினைகள் குறித்து முழுமையாக தீர்வு காண முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், நீதியின் பொருட்டு இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**16)** இருப்பினும், சட்டத்தால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் முறையாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், அதன் பின்பு காலதாமதத்தோடு மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்/வாதிக்கு மேற்படி அசல் வழக்கில் அதிக சிரமம் ஏற்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்படி எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தை ஈடு செய்யும் பொருட்டு, இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.500/-யை மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்று இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள கடந்த 21.01.2025 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவானது இதன்மூலம் ரத்து செய்து உத்தரவிடப்படுகின்றது. இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.500/-யை மனுதாரர் வருகின்ற 27.04.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ, எதிர்மனுதாரருக்கு நேரிடையாக செலுத்துமாறு இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது. தவறும்பட்சத்தில், இம்மனுவில்

பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவானது தன்னிச்சையாக ரத்தாகிவிடும் என்று தரப்பினர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.17 15:00:44 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.17 15:00:53 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**